**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 48** **நாள் : 10.03.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களுக்கான 2024-25ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டிகளை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் இன்று (10.03.2025) கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் கொடியேற்றி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற தொடக்க விழா நிகழ்ச்சியில் மாநகராட்சியின் கொடியினை ஏற்றி வைத்து, விளையாட்டு வீரர்களின் அணிவகுப்பினைப் பார்வையிட்டு, ஒலிம்பிக் தீபத்தினை ஏற்றி வைத்தார். பின்னர், வண்ண பலூன்களையும், புறாக்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வானில் பறக்க விட்டார். தொடர்ந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் முன்னிலையில் அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

இன்று (10.03.2025) கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் தொடங்கி வைக்கப்பட்ட இந்தப் போட்டிகள் இன்று முதல் 25.03.2025 வரை நடைபெற உள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களில் 1,756 ஆண்கள், 586 பெண்கள் என 2,342 நபர்கள், 74 மாமன்ற உறுப்பினர்கள் என மொத்தம் 2,416 நபர்கள் பங்கேற்கின்றனர்.

ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில் 11.03.2025 அன்று கேரம் (Carrom) மற்றும் 12.03.2025 அன்று சதுரங்க ஆட்டம் (Chess), பூந்தமல்லி நெடுஞ்சாலை-நேரு பூங்காவில் 13.03.2025 அன்று கால்பந்து (Football), கண்ணப்பர் விளையாட்டுத்திடலில் 14.03.2025 அன்று டென்னிகாய்ட் (Tennikoit), எறிபந்து (Throw ball), கோ-கோ (Kho-Kho), மந்தைவெளி-அல்போன்சா விளையாட்டுத் திடலில் 15.03.2025 அன்று டேபிள் டென்னிஸ், கண்ணப்பர் விளையாட்டுத் திடலில் 17.03.2025 அன்று கைப்பந்து மற்றும் கபடி போட்டிகள், வியாசர்பாடி-முல்லை நகர்-இறகுப்பந்து உள்விளையாட்டு அரங்கில் 18.03.2025 அன்று இறகுப்பந்து (Shuttle Badminton), பூந்தமல்லி நேரு பூங்காவில் 19.03.2025 மற்றும் 20.03.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு தடகளப் போட்டிகள், கயிறு இழுத்தல் மற்றும் Lucky Corner போட்டிகள், மைலேடிஸ் நீச்சல் குளத்தில் 22.03.2025 அன்று நீச்சல் போட்டி, கண்ணப்பர் விளையாட்டுத் திடலிலும், செனாய் நகர்-கிரெசன்ட் விளையாட்டுத் திடலிலும் 24.03.2025 மற்றும் 25.03.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு கிரிக்கெட் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் திரு.த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஸ்ரீ இராஜேஸ்வரி, திரு.கே.பி.சொக்கலிங்கம், திரு.அ. தீர்த்தி, திரு.மு. சரவணன், திரு. பரிதி இளம்சுருதி, திரு.ப. சுப்பிரமணி, திருமதி சி. துர்கா தேவி, திருமதி பா. வேளாங்கண்ணி, திருமதி மோ. சரஸ்வதி உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**